**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 389/2017

Deposition Of Witness for

Prosecution PW 2
Defense
Court

Name — வில்லி மாடன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of February 2021.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்து போன ஆறுமுகம் என்னுடைய மனைவி. சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் நான்கு முக்கு ரோட்டில் நானும் எனது மனைவியும் காலை 7.00 மணியளவில் பால் வாங்குவதற்காக சென்ற போது தெற்கிலிருந்து ஒரு பைக் வந்து என்னுடைய மனைவி மீது மோதி தூக்கி வீசப்பட்டார். வண்டி ஓட்டி வந்த நபரை என்னால் அடையாளம் காட்டமுடியாது ஞாபகமில்லை எதிரி ஆஜரில்லை. ஒரு கையிலும், காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னுடைய மனைவியை ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். என்னுடைய மனைவி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். பைக் ஓட்டிய நபரை யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 389/2017

Deposition Of Witness for

Prosecution PW 1
Defense
Court

Name நயினார்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of February 2021.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ஆறுமுகம் என்னுடைய தாயார். சம்பவ தேதி ஞாபகமில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக என்னுடைய அம்மாவும் அப்பாவும் மூன்றடைப்பு சர்வீஸ் ரோட்டில் உள்ள மண்ரோட்டில் பால் கறப்பதற்காக நின்று கொண்டிருந்த போது Discover பைக் மோதி இறந்துவிட்டதாக சொன்னார்கள். வண்டியை ஓட்டிய நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் எதிரி ஆஜரில்லை. விபத்து நடந்தவுடன் எதிரியும் ஐகிரவுண்ட் மருத்துமவனைக்கு வந்தார் நான் பக்கத்தில் உள்ள கடையில் டீ குடித்து கொண்டிருந்த போது சிங்காரம் என்பவர் போன் செய்து சொன்னால் நான் சம்பவ இடம் சென்று 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தேன். நான் பார்க்கும் போது என்னுடைய அம்மாவிற்கு ஒரு கையும் காலும் முறிந்து காணப்பட்டது. ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். சம்பவத்தை கணபதி, சிங்காரவேல் பார்த்ததாக சொன்னார்கள். மருத்துவமனையில் வைத்து சிகிச்சை பலனின்றி எனதுஅம்மா இறந்துவிட்டார் நான் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நீங்கள் முதல் விசாரணையில் கூறியது போல் சம்பவம் சர்வீஸ் ரோட்டில் உள்ள மண்

ரோட்டில் நடந்ததாக தான புகார்வாக்குமூலத்திலும் போலிசாரிடமும் கூறி உள்ளீர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு வடக்கே 30 அடி தூரத்தில் தான் மெயின் ரோட்டை கடக்கும் பாதை உள்ளது என்றால் சரியல்ல. மெயின் ரோட்டியை கடக்கும் பாதை அருகில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வண்டியை ஓட்டிய நபர் யார் என உங்களுக்கு தெரியாது போலிசார் சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுத்த பின்பு போலிசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் ஒருவருடம் கழித்து விசாரித்தார்கள். சர்விஸ் ரோட்டின் இருபுறமும் வேகதடை இருக்கும் என்றால் சம்பவத்தின் போது இல்லை இப்போது தான் போட்டார்கள். சம்பவ காலத்தின் போது வேகத்தடை இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தை யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் காவல் ஆய்வாளரிடம் தான் கொடுத்தேன். சம்பவ நடந்த அன்றே போலிசார் எதிரியை கைது செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரியை நான் காவல்நிலையம் அழைத்து செல்லவில்லை மருத்துவமனை அழைத்து சென்றேன். நீங்கள் சொன்னது போல் இந்த விபத்து நடைபெறவில்லை காயம் கவனகுறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசாரிடம் எத்தனை கையெழுத்து போட்டு கொடுத்தீர்கள் என்றால் 5 வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். விபத்து இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு கொடுத்துள்ளீர்கள் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.